★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 22 ரபி. ஆகி 20 இதழ் 357

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4—2—83

**G.C.E A/L 83**

தூயபிரயோக கணிதம்
புதிய பகல் நேரவகுப்பு
(Mon – Fri)
ஆரம்பம்: 7 - 2 - 83
7-00 — 8-00 A M அட்சரகணிதம்
2-30 P. M. தொடர்பு வேகம்
3-30 P M. திரிகோணகணிதம்
ஆசிரியர்: RAVIMOHAN
மணியம்ஸ் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(ஸ்ரீதர் சினிமா — நாகவிகாரை இடையில்) 6082

## யாழ். செயலகத்தில் சுதந்திரதினம்

[யாழ்ப்பாணம்]

யாழ் செயலகத்தில் சுதந்திரதினம் இன்றுகாலை கொண்டாடப்படவுள்ளது.

காலை 8-30க்கு தேசியக் கொடியும், யாழ். மாவட்ட அபிவிருத்திசபைக்கான நந்திக் கொடியும் ஏற்றிவைக்கப்படும். இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் தேசிய கீதம் இசைப்பர். 8-35க்கு பொங்கல் பரிமாறப்படும்.

இவ்வைபவத்தில் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், பிரதம-உதவி-லிகிதர்கள், ஊழியர்கள் கலந்து கொள்வர்.

[8-ம் பக்கம் பார்க்க]

★ பாடசாலை பகிஷ்கரிப்பு ★ பல இடங்களில் கடையடைப்பு ★ திரை அரங்குகளில் காட்சிகள் இல்லை

# யாழ். மாவட்டத்தில் பூரண ஹர்த்தால்!

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளைப் பகிஷ்கரித்து, கடைகளைப்பூட்டி வைத்து, திரையரங்குகளில் படங்களைத் திரையிடாது ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழீழ விடுதலை அணி விடுத்த கோரிக்கை வடமாகாணத்தின் பலபகுதிகளிலும் வெற்றி அளித்துள்ளது.

யாழ். நகரில் பிரபல கல்லூரிகள் உள்ளிட்டு சகல பாடசாலைகளுக்கும் மாணவர்கள் செல்லாததால் வகுப்புகள் நடைபெறவில்லை. ஆனாலும் ஆசிரியர்கள் நூறுவீதம் சமுகமளித்திருந்தனர். ஒரு சில பாடசாலைகளுக்கு குறைவான மாணவர்கள் சென்றபோதும், அவர்களும் விளையாட்டுக்களிலேயே ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

தனியார் கல்லூரிகளும் மூடப்பட்டிருந்தன.

யாழ். நகர் தவிர்ந்த பட்டின-கிராமப் புறங்களிலுள்ள பாடசாலைகளுக்குக் குறைந்தளவு மாணவர்களே சென்றனர்.

நேற்றுப் பகல் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது. சில கடைகள் காலையில் ஓரளவு திறக்கப்பட்டு நண்பகலுடன் மூடப்பட்டன.

இ. போ. ச. பஸ்களில் பிரயாணிகளின் தொகைமிகவும் குறைவாகவே காணப்பட்டது. சில பஸ்களில் சாரதியும் நடத்துநரும் மாத்திரமே இருந்தனர்.

அதிகமான பிரயாணிகளை ஏற்றி வந்த சில மினிபஸ்களை

(8-ம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் வரவு குறைவு

(வவனியா)

வவனியா தமிழ் மகாவித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாசாலை, இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், இலங்கை திருச்சபை கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் ஆகியவற்றில் நேற்று மாணவர்கள் வரவு மிகக் குறைவாகவிருந்தது.

வவனியா நகரில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருந்தது. கடையடைப்பு இடம் பெறவில்லை.

மதியபோசனத்திற்குப் பின்னர் வவனியா நகரிலுள்ள பாடசாலைகள், மாணவர்கள் வரவின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

பாடசாலைகளைப்பகிஷ்கரிக்குமாறு கோரும் பெரிய அளவிலான சுவரொட்டிகள் வவனியா நகரின் பலபகுதிகளிலும் காணப்பட்டன. [வெ]

## இ. போ. ச. பஸ் தீயிடப்பட்டது

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான ஒரு பஸ் நேற்றுக் காலை தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

இச்சம்பவம் நேற்றுக் காலை ஏழரை மணியளவில் கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில் பலாலி வீதியில் நிகழ்ந்தது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

'பருத்தித்துறை டிப்போவுக்குச் சொந்தமான குறிப்பிட்ட பஸ் அச்சுவேலி வழியாக யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தபோது கந்தர்மடச் சந்திக்கருகில் நான்கு இளைஞர்கள் பஸ்ஸை மறித்து முன்பக்க வாசலால் இருவரும் பின்பக்க வாசலால் இருவரும் ஏறினர். பஸ்ஸைச் செலுத்த வேண்டாமென்றும், பஸ்ஸை பாதையின் குறுக்காக நிறுத்தி வைக்குமாறும் இரு இளைஞர்கள் சாரதியிடம் கைத்துப்பாக்கிமுனையில் கூற, மற்றைய இளைஞர்களும் கைத்துப்பாக்கி முனையில் பிரயாணிகளை கீழே

(8-ம் பக்கம் பார்க்க)

## மற்றுமொரு பஸ்ஸுக்கு தீ வைப்பு முயற்சி!

### நவாலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை ஐந்துமணியளவில் வடபிராந்திய போக்குவரத்து சபையின் மற்றுமொரு பஸ்ஸை தீயிட்டுக்கொளுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

மாதகலிலிருந்து நவாலி ஊடாக யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த பஸ், நேற்று மாலை 5 மணியளவில் நவாலியில் ஆறு இளைஞர்களினால் மறிக்கப்பட்டது. இந்த இளைஞர்களிடம் இரண்டு கைத்துப்பாக்கிகள் இருந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பஸ்ஸை மறித்த இளைஞர்கள், பஸ் டயர்களுக்கு மண்ணெண்ணெயை ஊற்றி நெருப்பு வைத்துவிட்டு ஓடியபோது; சாரதியும் நடத்துநரும் பஸ்ஸிலிருந்த பிரயாணிகளும் பொதுமக்களின் உதவியுடன் தீயை அணைத்துவிட்டனர்

(8-ம் பக்கம் பார்க்க]

## பருத்தித்துறையில் கடை அடைப்பு

(புலோலி)

பருத்தித்துறையில் நேற்று பூரண அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் அனைத்துமே பூட்டப்பட்டிருந்தன.

பாடசாலைகளில் வரவு பத்து வீதமாக இருந்தது. தனியார் கல்வி நிலையங்கள், படமாளிகைகள் மூடப்பட்டிருந்தன. சந்தையும் கூடவில்லை.

மக்கள் நடமாட்டமும் மிகவும் குறைவாக இருந்தது.

★ யாழ். பல்கலைக்கழக மாணவர்களின்

# 4 நாள் உண்ணாவிரதம் மாலையில் முடிவுபெறும்!

## 2-வதுகட்ட உண்ணாவிரதம் இன்று ஆரம்பம்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் நான்குநாள் உண்ணாவிரதப் போராட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு முடிவடைகிறது. இதனையடுத்து 2வது கட்டமாக 50 மாணவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருப்பர்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் மாணவர் அவைத் தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் 50 மாணவ மாணவிகள் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர்.

### தொண்டமானுக்கு மகஜர்

பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டிருக்கும் உண்ணாவிரதப் போராட்டக் கோரிக்கைக்கு நிவாரணம் அளிக்குமாறு கோரி; பல்கலைக்கழக பணியாளர் சங்கப்பொதுச் செயலாளர் திரு. பி. டி. சற்குணராஜா, கிராமிய சிறுகைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி வடபகுதி தலைவர் திரு. அ. வைத்திலிங்கம் நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதத்தில் பங்கு கொண்டு ஆதரவளித்தார்.

புதுடில்லியில் உள்ள பிரபல பத்திரிகையாளரான திரு. சர்க்கார், ஜெர்மன் பல்கலைக்

(8ம் பக்கம் பார்க்க)

**அரிய சந்தர்ப்பம்**

மீண்டும் புதிய வகுப்புகள் ஆரம்பம்.

★ COMPUTER PROGRAMMING
முதலில் சேரும் 25 மாணவருக்கு இலவசப் பயிற்சியளிக்கப்படும்.

★ HOTEL MANAGEMENT
விசேட விரிவுரைகள். நட்சத்திர ஹோட்டல்களில் செய்முறைப் பயிற்சி (Practical) இருபாலாரும் கற்கலாம்.

★ றேடியோ-டெலிவிஷன்
சிறந்த செய்முறைப் பயிற்சி

ஆரம்பம்: 12-03-83. நேரில் வரவும்
THE SCHOOL OF COMPUTER STUDIES
52/1, கனகரத்தினம் கட்டிடம்,
(வீனஸ் றெக்கோடிங் பார் மேல் மாடியில்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6091

# மட்டக்களப்பிலும் உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவுதெரிவித்து மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி மாணவர்கள் அனைவரும் நேற்று வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

பல்கலைக்கழககல்லூரிமாணவர் பேரவைத் தலைவர் திரு. வி. மயில்வாகனம் தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் பல்கலைக்கழக கல்லூரி வளவில் இன்று வெள்ளிக்கிழமை உண்ணாவிரதம் அனுஷ்டிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து இன்று காலை நடைபெறும் உண்ணாவிரதத்தில் சிங்கள மாணவ மாணவிகளும் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

# வரி விளம்பரம்

## பயிற்சி

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், எலக்றிக்கல் வயறிங், எலக்றிக்கல் றீவைண்டிங், மோட்டமெக்கானிசம், வெல்டிங் பயிற்சிகள் ஆரம்பம் 09-02-83 விபரம் நேரில். (The School of Computer Studies) 52/1, கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் மேல் மாடி) விராவ்லி வீதி, யாழ்ப்பாணம். 6035

3 மாத எலக்றிக்கல் வயறிங் பயிற்சி 10-02-1983-ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology, 11B, Momsac Building, Stanley Road, Jaffna. 6083

## விற்பனைக்கு

உரும்பராய் இந்துக் கல்லூரிக்கு முன் ஒழுங்கையில் வீடு கட்டவோ அல்லது தோட்டமோ செய்யக்கூடிய 5 பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: த. ஸ்ரீபதி, சட்டத்தரணி, 20, பழம்ரோட், யாழ்ப்பாணம். 6080

நுணாவில் சந்தியில் பிரதான வீதிக்கு அருகாமையில் வீடு கட்ட உகந்த 7 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; த. மயில்வாகனம், (யாழ்ப்பாணக் கல்லூரி அருகாமை) வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை. 6078

எங்களிடம் சகல விதமான பேப்பர்களும் மலிவு விலையில் உண்டு. வாங்குபவர்களுக்கு 50% கழிவுடன் வெட்டிக் கொடுக்கப்படும். விபுலானந்த அச்சகம், 248/5, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 6069

## தேவை

நல்ல நிலையிலுள்ள பாவித்த தையல் மெசின் [கைமெஷினாகவும் இருக்கலாம்] தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். வே வேலாயுதம் பிள்ளை, கலட்டிவீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி [6052]

U. K. இல் உத்தியோகம் பார்க்கும் B. Sc. Engineering படித்த வருடவருமானம் 7500 ஸ்ரேலிங் பவுண் பெறும் 29 வயது மணமகனுக்கு பெற்றோர் அழகான, உயரமான படித்த, வெள்ளாள இந்து சமய மணப்பெண் தேடுகிறார்கள். பெற்றோர் கனடா பிரஜா உரிமை பெற்றவர்கள் ஜாதக குறிப்புடனும் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 6085, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 6085


## 'நந்திக்கொடி தொடர்ந்து இருக்க வேண்டும்'

(நீர்வேலி)

''யாழ்ப்பாண மாவட்டத்தின் சரித்திர முக்கியத்தை 'நந்திக் கொடி' பேணிநிற்கிறது. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்களாலும் இக்கொடி மதித்துப்பாதுகாக்கப்பட்டதொன்று. இத்தகைய நந்திக்கொடி யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் உத்தியோகபூர்வ கொடியாகத் தொடர்ந்து விளங்கவேண்டும்''

மேற்கண்டவாறு நீர்வேலி காமாட்சியம்பாள் இந்துபரிபாலனசபை, விஸ்வகர்மகுல சங்கம் ஆகியனவற்றின் செயலாளர் த பரராசசிங்கம் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (கி)


## வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திரம்

இடம்:- நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வெற்றுச்சாக்குத் தொகை:- 2350

விண்ணப்பப் படிவம்:- ரூபா 4 00

மீளளிப்புபணம்:- ரூபா 300/-

முடிவு திகதி:- 10/2/83 நண்பகல் 12-00 மணி.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு'' எனக்குறிப்பிட்டு தலைவர், நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், நெடுந்தீவு. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இரா. தர்மலிங்கம்
பொது முகாமையாளர்

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
நெடுந்தீவு. 6067

வலிகிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி

## வெற்றுச்சாக்கு விற்பனை

மேற்படி சங்கத்தின் தரம் பிரிக்கப்பட்ட சுமார் 10, 831 வெற்றுச்சாக்குகள் (பத்தாயிரத்து எண்ணூற்றி முப்பத்தி ஒன்று) விற்பனைக்குண்டு விண்ணப்பிக்க விரும்புவோர் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- (ஒருநூறு) மீளத்தகாத பணமாக ரூபா 5/-ம் சங்கக் காரியாலயத்தில் 10-2-83ந் திகதிக்கு முன்கட்டி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை 15-2-83ந் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விண்ணப்பிக்கும்போது என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்'' என்று குறிப்பிடல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
வலி கிழக்கு வடபகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி,

6079


## பசுவதை

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறைப் பகுதியிலும் பசு மாடுகளைக்கொன்று இறைச்சியாக்கி கசாப்புக் கடைகளில் வைத்துவிற்கும் மனிதாபிமான மற்ற செயல் பெருவதாக பாவனையாளர் சங்கத்திற்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழையவீமன்காமம் பாவனையாளர் சங்க கூட்டமொன்று மாங்கொல்லை இளைஞர் முன்னேற்றமன்ற சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற சமயம் இவ்வாறு உறுப்பினர்களால் புகார் தெரிவிக்கப்பட்டது.

## ஜனசக்தி ச. ச. நி. நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் - அரசடி சன சமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. மு. சந்திரராசா, உபதலைவர் திரு மு. நற்குணம், செயலாளர்: திரு. வ. தம்பித்துரை, உப செயலாளர்: திரு. இ. சரத் சந்திர போஷ், பொருளாளர்: திரு. கு. நற்குணராசா.

நிர்வாக சபை உறுப்பினர்களாக நால்வர் தெரிவானார்கள்.

# ''சுதந்திரதின கொண்டாட்டங்களை தமிழ்மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும்''

## தமிழ் இளைஞர்பேரவை அறிக்கை

[யாழ்ப்பாணம்]

''ஸ்ரீலங்கா அரசாங்கம் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் தினமான இன்று 4ம் திகதி தமிழ் மக்கள் அனைவரும் இக்கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிப்பதுடன் சுதந்திர தமிழீழத்தை நிறுவுவோமென்று இத்தினத்தில் திடசங்கற்பம் பூணவேண்டும்''.

இவ்வாறு தமிழ் இளைஞர் பேரவையின் கட்டுப்பாட்டுக் குழு சார்பில் திரு. மாவை சேனாதிராசா விடுத்துள்ள சுதந்திர தின பகிஷ்கரிப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் அவ்வறிக்கையில் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது:-

''இலங்கையில் ஸ்ரீலங்கா அரசினாலும் அதன் இராணுவத்தாலும் தமிழ்ஈழம் ஆக்கிரமிக்கப்பட்டு, தமிழ்த் தேசிய தினம் அடிமைப்படுத்தப்பட்டுள்ள இந்நிலையில் மாறி மாறி வரும் ஸ்ரீலங்கா அரசுகள் ஆண்டுதோறும் இலங்கையில் சுதந்திரதின விழாக்களைக் கொண்டாடி வருகின்றன.

''முன்னெப்போதையும்விட இன்று இலங்கையில் ஜனநாயகம் கல்லறையில் கட்டப்பட்டு, ஈழப் பொருளாதாரம் முதலாளித்துவத்தினால் சூறையாடப்பட்டு, ஏகாதிபத்தியத்துக்கு இலங்கை ஈடுவைக்கப்பட்டுள்ள நிலைமை மோசமடைந்திருக்கிறது.

''பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் மத குருமார், கல்விமான்கள், மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோர் சிறைச்சாலைகளில் சித்திரவதைக்குள்ளாகிவருகிறார்கள். உரிமைக்கும், விடுதலைக்கும் போராடும் விடுதலை இயக்கங்கள் அழிக்கப்படக்கூடிய பயங்கர சூழ்நிலையும் அரசியல் கட்சிகள் சீர்குலைக்கப்படும் அச்சுறுத்தலும் வலுப்படுத்தப் பட்டுள்ளன.'' (வெ)

## வவனியா அரச அதிபர்

[வவனியா]

மன்னார் அரசாங்க அதிபர் திரு. கே. செந்திநாதன் புலமைப் பரிசில்பெற்று அவுஸ்திரேலியா செல்வதால் மன்னார்ப் பகுதிப் பதில் அரசாங்க அதிபராக வவனியா அரசாங்க அதிபர் திரு கே.லி. லோகேஸ்வரன் கடமையாற்றுவார்.

இம்மாதம் 5ம் திகதி முதல் மூன்று மாத காலத்துக்கு திரு. லோகேஸ்வரன் கடமையாற்றுவார்.

வவனியாக் கச்சேரியில் திட்டமிடல் அதிகாரியாகப் பணிபுரிந்த திரு. எஸ். ரங்கராஜா மன்னார் கச்சேரி திட்டமிடல் அதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார். இவருக்கு வவனியாக் கச்சேரி ஊழியர்களினால் பிரியாவிடை அளிக்கப்பட்டது. (அ)

## ''பிள்ளைகளை நற்குணசீலராக்கும் பொறுப்பு பெற்றோருடையது''

[அரியாலை]

''கொலைஞனாகவோ, கொள்ளைக்காரனாகவோ எந்தப் பிள்ளையும் உலகில் பிறப்பதில்லை. அவனது சூழலும், சுற்றாடலும், நண்பர்களுமே இந்த அவலநிலைக்கு அவனை வழி நடத்துகின்றன. எமது பிள்ளைகளை நற்குணசீலர்களாகவும், சமூகத்திலே நல்ல பிரஜைகளாகவும் ஆக்கும் முழுப் பொறுப்பும் பெற்றோருடையதாகும். இதனை அநேக பெற்றோர் உணரத் தவறுவதினாலேயே இன்று சமூகத்தில் பல பிரச்னைகள் பல கோணத்திலும் பல ரூபத்திலும் உருவெடுத்துள்ளன.''

இவ்வாறு யாழ். பரி, யோவான் கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராஜன், கல்லூரியில் புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார். கல்லூரியின் பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது. [வெ]

## நிர்வாகிகள்

(புலோலி)

குடத்தனை மணற்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் திரு. அ. அன்ரன் தலைமையில் நடைபெற்றது. தலைவராக யா. செமியாம்பிள்ளையும், உபதலைவராக சு. யோகராசாவும், செயலாளராக எவ். பிலிப் இராஜதாசும், உபசெயலாளராக ம. சூசைதாசும், பொருளாளராக ரோ தேவதாசும் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் 7 பேர்கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## தீவகத்து தலைவன்

மண்டைதீவு முன்னாள் கிராமசபைத் தலைவரும், சமாதான நீதிபதியுமான கணபதிப்பிள்ளை கைலாசபிள்ளை அமரராகி நேற்றுடன் மூன்றாண்டு களாகின்றன. இவ்வேளை இவரது சேவைகளை எம்மால் பாராட்டாது விடமுடியாது.

1907ம் ஆண்டுமேமாதம் 17ந்திகதி பிறந்தஇவர் தனதுகல்வியை மண்டைதீவிலும், பின் யாழ். இந்துக் கல்லூரியிலும் கற்றார். கிராம சபைத் தலைவராகவும், சமாதான நீதிபதியாகவும், உபதபால் அதிபராகவும் மண்டைதீவு மக்களுக்கு சிறந்த தொண்டாற்றினர். இவரது இழப்பால் மண்டைதீவு கிராமம ஒருசிறந்த சேவையாளனை இழந்து விட்டது.

எமது கிராமத்தின் அழியாச் சின்னமாக விளங்கும் கிராம சபை மண்டபம், ஆஸ்பத்திரி போன்றவற்றினை நிறுவுவதற்கும் இவரே காரணமாக இருந்தார்.

அமரர் கைலாசபிள்ளை மனித இறைமையுடன் உரிமைகளை வாதிடும்திறமை மிக்கவர், தன்னம்பிக்கை கொண்ட சேவை மனம் நிறைந்த தீரர். யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் சரித்திரத்தில் இவருக்கு ஒரு தனி இடம் உண்டு என்பதனை எவரும் மறுக்கார். பற்பல கோணங்களிலும் எமது கிராமத்துக்கு மதிப்பை தேடித்தந்த இவர் பண்ணைப் பாலம், பண்ணை பஸ் வீதி என்பன அமைப்பதற்கும் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் அல்பிரட் தம்பிஐயாவுடன் சேர்ந்து அயராது உழைத்தவர். யாழ் மாவட்டத்தில் இவருக்கு இருந்தமதிப்பு எம் கிராமத்தின் மதிப்பினை பலவகையிலும் உயர்த்தியது எனலாம்.

நா. இராசலிங்கம்
கிராமோதய சபைத்தலைவர்
மண்டைதீவு


## வெற்றிடங்கள்

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள வேக்ஸ்சொப் பி (F) பிற்றர், ரிங்கர், வெல்டர், ரேணர்
(WORK SHOP-FITTER, TINKER, WELDER and TURNER)
உடனடியாகத் தேவை.
நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.
சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்,
நீர்வேலி.

(6005)

## மூன்றுவது ஆண்டு பிறந்த நாள்

யாழ். காங்கேசன்துறை வீதி, 'சரஸ்வதி இல்லம்' அழகிரிசாமி தம்பதிகளின் அருந்தவச் செல்வன் அலெக்ஸாந்தர் தமது மூன்றுவது ஆண்டுப் பிறந்த நாளை இன்று தமது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

அலெக்ஸாந்தரை அப்பா, அம்மா, சின்னம்மா, இந்தியா அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பா, மாமி ஆகியோர் அறிவும், ஆற்றலும், ஆண்மையும் நிறைந்த செல்வமாக வளர்ந்துவர வாழ்த்துகிறார்கள்.

பிறந்தநாளில் அன்பர்கள் அனைவரையும் தேநீர் விருந்துக்கு அழைக்கும் செல்வன் அலெக்ஸாந்தர் அன்பளிப்புகளை விரும்பவில்லை. 6077




## காந்திய பாலர் பாடசாலை

(துணுக்காய்)

மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள செல்வபுரம் வடக்கு கிராமத்தில் காந்திய பாலர் பாடசாலை ஒன்று புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ப்பகுதி பெற்றோர்களின் வேண்டுகோளின் படியும், இளைஞர்களின் முயற்சியாலும் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

பாண்டியன்குளம் கிராம சேவை அலுவலர் திரு க. பாக்கியநாதன் மங்கள விளக்கேற்றி இப்பாடசாலையை ஆரம்பித்து வைத்தார் (வெ)

ஐக்கிய அமெரிக்கா

# அணுஆயுதப்போர்பிரகடனஞ் செய்யும்1வதுநாடாகக்கூடாது!

## நோபல்பரிசுபெற்ற 43 பேரின் விருப்பம்

நியுயோர்க், பெ. 3

நோபல் பரிசு பெற்ற நாற்பத்திமூன்று பிரமுகர்களும், அமெரிக்க விஞ்ஞான அக்கடமியைச் சேர்ந்த 500 விஞ்ஞானிகளும் அமெரிக்காவிடம் அணுஆயுதப் போரை ஆரம்பிக்கக்கூடாதெனக் கேட்டுள்ளனர்.

இவர்கள் தமது இந்தவேண்டுகோளில் அணு ஆயுதப் போரைப் பிரகடனஞ்செய்யும் முதல் நாடாக அமெரிக்கா இருக்கக்கூடாதென்றும் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்க விஞ்ஞானிகள் அக்கடமி தலைவரான ரபர்ட் மக்னமாரா, ''இவ்வாறுகொள்கை பீதியை ஓரளவு தணியச்செய்ய முடியும் அமெரிக்காவைக் கேட்டுக் கொள்வ யலாம்'' என்று தெரிவித்தன் மூலம் அணுஆயுத யுத்த தாரி. (கி)

## ★ அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் முதலாவது இந்தியர் விண்வெளி செல்வார்!

-- சோவியத் ஜெனரல் கிளிமுக் தகவல்

சென்னை, பெப். 3

''அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் முதலாவது இந்தியர் விண்வெளிக்குப் பயணமாவார்'' என்று தமிழகம் வந்திருந்த சோவியத் விண்வெளி வீரர் மேஜர் ஜெனரல் கிளிமுக் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு வந்துள்ள ஜெனரல் கிளிமுக், தமிழகத்துக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது பத்திரிகையாளருக்குவழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்குறித்த தகவலை வெளியிட்டார்.

மேஜர் ஜெனரல் கிளிமுக், சோவியத் யூனியனின் விண்வெளி ஆராய்ச்சி நகரான 'ஸ்டார்' நகரில் இயங்கிவரும் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் உபதலைவராவார். இவர் மூன்று தடவைகள் விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டவர்.

'ஸ்டார்' நகரிலேயே சோவியத் வீரர்களுடன் விண்வெளி செல்வதற்கான பயிற்சிகளில் இரு இந்திய வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். கமாண்டர் மல்ஹோத்ரா, ஸ்குவார்டன் லீடர் சர்மா என்ற இரு இந்திய விமானப்படை வீரர்களுமே அந்த இருவருமாவர்.

ஜெனரல் கிளிமுக் மேலும், இந்த இருவரும் ரஷ்ய மொழியை வெகுவிரைவாகக் கிரகித்துக்கொண்டு விட்டனர் என்றும், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இவர்களில் ஒருவர் விண்வெளி செல்வாரென்றும் தெரிவித்தார். (கி)

## பாரதத்தில் சிறப்பு முத்திரை

புதுடில்லி, பெப். 3

முன்னைநாள் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து மறைந்த பிராங்கிளின் டெலனு ரூஸ்வெல்ட்டின் நூற்றாண்டு விழாவை ஒட்டிப் பாரத தபால் - தந்தி இலாகா ஜனவரி மாதம் 30ந் திகதி சிறப்புத் தபால் முத்திரையை வெளியிட்டுள்ளது. [உ]

# "மாநிலக் கட்சிகள் பிரிவினைக்கட்சிகளல்ல"

சென்னை, பெப். 2

''மாநில கட்சிகள் எந்த வகையிலும் பிரிவினைக்கட்சிகளில்லை. இவை அந்தந்தமாநில மக்களின் அடித்தளப் பிரச்சினைகளையும், அபிலாசைகளையும் பிரதிபலிக்கின்றன. இன்று பல மாநிலங்களில் இனைத்திந்தியக் கட்சிகள் மக்கள் தொடர்பை இழந்துவிட்டன. மாநிலக் கட்சிகள் எந்தவகையிலும் பிரிவினைக்குத் தூபமிடவில்லை. தேசிய ஒற்றுமையிலும், நலனிலும் நம்பிக்கை கொண்டுள்ளவையே'' என்று மிசோரம் மக்கள் கட்சியின் தலைவர் பிரிகேடியர் செய்லோ சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

''இந்தியாவின் ஏனைய பகுதிகளைவிட தெற்கிலும், வடகிழக்கிலுமே மாநிலக்கட்சிகளுக்கு தேவை அதிகம்உள்ளது. தேசியக்கட்சிகள் இதயசுத்தியும் மாநில மக்களின் நலனை நேர்மையாகவும்பேணமுன்வந்தால் இவைகளும் வளரமுடியும். மிசோர மாநிலத்தில் உயிரசபத்து எந்தவேளையிலும் ஏற்படலாம் என்பது வீண் வதந்தி. இந்தமாநிலத்தை விட உத்தரப்பிரதேசத்திலும், பீகார் மாநிலத்திலும் மாதந்தோறும் அதிகமானோர் கொலை செய்யப்படுகிறார்கள். மேகாலய, அஸாம் மாநிலங்களில் தேர்தலுக்குஉரிய சூழல் இல்லை', என்றும் அவர்கருத்து வெளியிட்டார். (உ)

''ஐரோப்பாவில்

## சோவியத் ஆதரவு தரா விட்டாலும் அமெரிக்கா ஏவுகணைகளை நிறுவாது!''

- உபஜனாதிபதி புஷ்

லண்டன், பெப், 3

''நடுத்தர அணுசக்தி ஏவுகணைகளை ஐரோப்பாவில் நிறுவுவதை வாபஸ் பெறுவதற்கு சோவியத் யூனியன் முன்வராவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் அமெரிக்கா ஐரோப்பாவில் அவற்றை நிறுவாது''.

இவ்வாறு அமெரிக்க உபஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார். திரு. புஷ் தற்போது ஏழு ஐரோப்பியநாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வருகிறார்.

இவர் மேலும் தெரிவித்ததாவது: ''நடுத்தர ஏவுகணைகளை ஐரோப்பாவில் நிறுவுவதை வாபஸ்பெற அமெரிக்காமுன்வந்துள்ளது. சோவியத் யூனியனையும் அவ்வாறு முன்வரச்செய்யும் யோசனைகளை அமெரிக்காஅறிவித்திருந்தது. ஆனால் அமெரிக்க யோசனைகளை ஏற்க சோவியத் மறுத்துள்ளது.

சோவியத்தனதுஆதரவைத் தராவிட்டாலும் அமெரிக்கா ஏவுகணைகளை ஐரோப்பாவில் நிறுவுவதை நிறுத்திக்கொள்வதில் தொடர்ந்தும் ஆர்வம் காட்டிவரும்.

சோவியத் தனதுநிலை குறித்துத் தெரிவிக்கும் கருத்துக்களையும் அமெரிக்கா ஆராயும்'' என்றார். (கி)

## இப்படியும் சம்பவம்!

நெல்லை, பெப் 3

தனியாகப் போகும் பெண்களைக்கீழ்த்தரமாகப்பேசி வீண் வம்புக்கு இழுத்துவரும் நபரைக் கண்டித்த ஒருவர் அன்றிரவே வீதியில் வைத்து அரிவாள்களால் வெட்டப்பட்டு கொலைசெய்யப்பட்டார்.

இக்கொலைச் சம்பவம் நெல்லை மாவட்டத்தில் கடம்பூரில் நிகழ்ந்தது. பெண்களுடன் வீண் வம்புகளை தொடரும்போக்கிரியாக இதே ஊரைச் சேர்ந்த சிவனுசாமி என்பவரே கண்டித்துரைத்த இளைஞர் அய்யாப்பிள்ளையை வழிமறித்து வெட்டிக்கொன்றுவிட்டுத் தலைமறைவாகியுள்ளார்.

## "இந்திரா பாரதத்தின் ஏகதலைவர்"

முதலமைச்சர் என். டி. ராமராவ்

புதுடில்லி, ஜன. 3

''பாரதத்தின் ஏக தலைவர் இந்திரா காந்தியே'' என்று புதிய ஆந்திரா மாநில முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் தெரிவித்தார்.

தமது புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் கடந்த வாரம் முதல் தடவையாக இவர் புதுடில்லி சென்றிருந்தார். அங்கு பிரதமர் திருமதி இந்திராகாந்தி, ஜனாதிபதி ஸெயில்சிங் மற்றும் சிரேஷ்ட மத்திய அமைச்சர்கள் சிலரையும் இவர் சந்தித்தார்.

பிரதமர் திருமதி காந்தியுடனான தமது சந்திப்பு மிகவும் பயனுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவுமிருந்ததென்று முதலமைச்சர் ராமராவ் கூறினார். அத்துடன் தமது மாநிலத்தால் மத்திய அரசுக்கு எந்தவித பிரச்சினையும் எழாது என்றும், மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையிலான உறவுகள் வலுவுள்ளதாக இருக்கவேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழககலைக்குழு மொரீஷியஸ் பயணம்

புதுடில்லி, செப். 3

தமிழக நாட்டிய நாடகக் குழுவொன்றுமொரீஷியஸ்தீவு செல்கின்றது. இக்குழு அங்கு பாரதி நூற்றாண்டுவிழாவில் கலந்து கொள்ளும்.

''பாரதி கண்ணம்மா'என்ற பொருளிலேயே இக்குழுவினரின் நாட்டிய நாடகம் அமைந்திருக்கும்.

மொரீஷியஸ் தீவிற்கு இக்குழு செல்வதற்கான ஏற்பாட்டை மத்திய அரசுடன் தமிழக அரசு இணைந்து செய்திருந்தது. (கி)

## தீக்குளித்த ஏழுமலைக்கு நீதி!

சிக்கலூர், பெப். 3

இலங்கைத் தமிழருக்காக சிறையிலிருந்த தமிழக எதிர்க்கட்சித் தலைவர் மு. கருணாநிதியை விடுதலைசெய்யக்கோரி தீக்குளித்த சிக்கலூரைச் சேர்ந்த ஏழுமலையின் தொழில் பாதுகாப்புக்கு நிதி வழங்கும் பொருட்டு கலைஞரின் எடைக்கு எடை ரூபா வழங்கும்நிகழ்ச்சி பாலக்கோடு சந்தைத்திடலில் நடைபெற்றது.

# "வரதட்சணைபெறும்ஆடவரை மறுமணம் செய்ய அனுமதிக்கக் கூடாது!"

## இந்திய மகளிர் சங்கம் வலியுறுத்து

சென்னை, பெப். 3

'பெண்களை வரதட்சணைக் கெடுபிடிகளுக்குள்ளாக்கி திருமணம் செய்து கொள்ளும் ஆடவரை பத்துவருடங்களுக்கு மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கக்கூடாது. இவ்வாறு தடைசெய்யும் சட்டமொன்றை நாடாளுமன்றம் கொண்டுவரவேண்டும்'.

மேற்கண்டவாறு அகில இந்திய மகளிர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இந்த சங்கத்தின் ஐம்பத்தியோராவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் நாக்பூரில்இடம்பெற்றது. அப்போதே மேற்குறிப்பிட்ட வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

இந்தியமகளிரின் சமத்துவம், நலன் என்பனவற்றைப் பேணுவதையும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் மகளிரை ஈடுபடச் செய்வதையும் நோக்கமாகக்கொண்டு இச்சங்கம் இயங்கிவருகிறது.

இதன் தலைவியாக திருமதி சரோஜினி வரதப்பன் இருந்து வருகிறார். நாக்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் மேலும், இந்தியாவில் வரதட்சணைக் கெடுபிடிகளும், கொடுமைகளும் நாளாந்தம் பெருகிவருவது குறித்து இச்சங்கம் தனது கவலையைத் தெரிவித்தது. அத்துடன் வரதட்சணைகளைத் தமது விருப்பங்களுக்கமையப் பெற்ற பின்னரும்கூட மனைவியரைத் துன்புறுத்தியும், சில இடங்களில் விவாகரத்துப் பெற்று மறுமணம் செய்தும் வரும் கணவன்மாரது போக்கிற்கெதிராகவும் பலத்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது

அத்தகைய மறுமணங்களைத் தடைசெய்யும்வகையில், புதிய சட்டத்தைக்கொண்டுவர அரசாங்கத்தைத் தூண்டச்செய்யும் பொருட்டே மேற்கண்ட வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

வரதட்சணைக் கெடுபிடிகள் காரணமாக அப்பாவி இளம்பெண்கள் பலர் மரணத்தைத் தழுவிக்கொள்வதையும் இச்சங்கம் சுட்டிக்காட்டியது.

இருவருடங்களுக்கு முன்னர் சென்னையில் நன்கு படித்த இளம் பெண் ஒருவருடன் அவரது தலைமை தொழில் பார்க்கும் கணவர் வரதட்சணை விவகாரம் தொடர்பாக பிரச்சினைப்பட்டு வந்ததைத்தொடர்ந்து அப்பெண் தனக்குத்தானே தீமூட்டி தற்கொலை செய்திருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## அசாமில் வன்முறைகள் பெருகுகின்றன

புதுடில்லி, பெப். 3

அஸாமில்வன்முறைகள் அதிகரித்துக்கொண்டுவருகின்றன. இதுகுறித்து பிரதமர் திருமதி இந்திராகாந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அஸாமில் சாதாரண குடிமக்களும் வன்முறைகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தீவைப்பு, குண்டுவைப்பு, கொலைகள் போன்றன இவ்வன்முறைகளுள் அடங்குகின்றன.

திருமதி இந்திராகாந்தி கிழக்குபங்களாதேஷில்இருந்து அசாம் வர்த்தகர்களை மீண்டும் அங்கு திருப்பி அனுப்பும் சாத்தியமில்லை என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

அசாமில் வெளிமாநிலத்தவர் குடியேறியிருப்பதாலேயே பிரச்சினைகள் தலையெடுத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## நல்லுறவைப் பலப்படுத்துவது பற்றி ஆராய்வர்

(புலோலி.)

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதி பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் குழுக்கூட்டம் இம்மாதம் 6-ம் திகதி பருத்தித்துறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. ஈ. கே. ஆர். விஜயவர்த்தனு தலைமையில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியில் கிராமசேவை அலுவலர் பிரிவுகள் ரீதியாகப் பொலிஸ்—பொதுமக்கள் நல்லுறவுக்கூட்டங்களை நடத்துதல, பொலிஸ் விழிப்புக் குழுக்களை அமைத்தல், பொலிஸ் — பொதுமக்களுக்கிடையே மேலும் நல்லுறவைப் பலப்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் என்பனபற்றி ஆராயப்படுமென பருத்தித்துறை பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவுக்குழுச் செயலாளர் பேராசிரியர் வீ கே. கணேசலிங்கம் அறிவித்துள்ளார். [அ]

### மணிவாக்கு

பிறர் விடுதலை மறுப்பவர்கள் தாமும் அதற்கு உரிமையாளார்; தெய்வ நேர்மையின் கீழ் அவர்கள் நெடுநாள் அதனை நுகரவும் மாட்டார்கள்.

—ஆபிரகாம்லிங்கன்

# நமது நோக்கு

## சுதந்திரதாகம்

இன்று கொழும்பு காலிமுகத்திடலில் சுதந்திர தினக் கொண்டாட்டமும் ஜனாதிபதியின் சத்தியப்பிரமாணமும் சிறப்பாக நடைபெறுகின்றன. சுதந்திர வாழ்வை அனுபவிக்கும் மக்கள் அனைவருக்கும் குதூகலம் அளிக்கும் தினம் இது.

இச் சுபதினத்தில் நாட்டின் இன்னொரு பகுதியினர் சுதந்திரம் வேண்டி நிற்கின்றனர். தெற்கில் கொண்டாட்டம், வடக்கில் வருடாவருடம் தொடர்ந்து நிலவும் திண்டாட்டம்! தெற்கில் ஆயுத அணிவகுப்பு; பீரங்கி வேட்டு; தேசியகீதம்; வடக்கில் உண்ணாவிரதம், ஹர்த்தால் கடையடைப்பு, முப்படையினரின் ரோந்து சேவை.

இவ்வித முரண்பட்ட நிகழ்ச்சிகள் வருடாவருடம் நடைபெறுவதும், இந்த நிலைமையில் மாற்றங்காண விரும்புவோர் ஏமாற்றம் அடைவதும் நாட்டின் சுதந்திர வாழ்வுக்கு பங்கமாகி வருகின்றன.

"இது எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினில் ஒரு சக்தி பிறக்கின்றதா?

சிங்களத்தீவுக்கு பாலம் அமைக்க வேண்டுமென்று பாடிய பாரதியார் தம்முடைய நூற்றாண்டு நிறைவு விழாவில் எதனைக் கருதியிருப்பாரென்று யூகிப்பது நல்லது.

சிங்களத்தீவு பாதுகாப்பாக இருக்கின்றது; சிங்கள மக்கள் தங்கள் மொழி, மதம், கலாசாரம் முதலிய சுதந்திர வாழ்வின் முக்கிய அம்சங்களை அடைந்து அவற்றை விருத்தி செய்ய வாய்ப்புப் பெற்றிருக்கின்றனர்; அதில் முன்னேறுகின்றனர்.

பாரதியார் குறிப்பிட்ட பாலம் இன்றைய அரசியல் வரலாற்றில் தமிழகத்துடன் அல்ல; இலங்கை வாழ் தமிழ் மக்களுடனென்று கருதுவது சரியாகும்.

காரணம், இங்கு வாழும் இவ்விரு இனங்களும் ஒருவரையொருவர் நன்குப் புரிந்து கொண்டால், தமிழகத்துடன் கொள்ளும் தொடர்பு எவ்வாறுயுமிருக்கலாம்-கப்பல், றெயில் விமானம் போன்ற சட்டத்துக்கமைந்த வழிகள்; கள்ளக் கடத்தலும் மோசடியுமல்ல வென்பது வெளிப்படை.

எனவே இங்கு வாழும் தமிழ் மக்கள் சுதந்திர தாகம் கொண்டவர்களாகவே இன்னும் இருக்கின்றனர். அது தணியாத் தாகமென்பது தெம்பளிக்கின்றது. சுதந்திரம் கிட்டுமென்பதற்கு அறிகுறி.

காலகதியில் இவ்விதசுதந்திர இயக்கங்கள் திசை திருப்பபடுவதும் உண்டு; ஆனால் பொது மக்கள் வாழ்வுக்கு சுவையளிக்கும் சுதந்திரம் மனிதன் சுயமரியாதையுடையவன் என்பதை நிரூபிக்கின்றது.

தனிமனித சுதந்திரம், ஒரு இன விடுதலைதானும், எல்லையற்ற, கட்டுப்பாடற்ற பெரு வெளியென்று கொள்ளலாகாது.

கட்டுப்பாடுடையவர்களே சுதந்திர வாழ்வுக்கு உரித்தானவர்.

இந்த வகையில் இன்று சுதந்திர தினத்தை அலங்காரமாகக் கொண்டாடும் அரசு, தமிழ் மக்கள் சுதந்திரம் வேண்டி நிற்பதுதான் ஒரேகுறையென்று கொள்ளலாகாது.

தேசியக் கொடியின் அமைப்பைக் கொண்ட புடைவைகளில் உள்ளங்கிகள் தயாரிக்கப்பட்டு விற்பனையாகும் செய்தி உண்மையில் எவருக்கும் வேதனையளிக்கும்.

தேசியக்கொடிக்கு கௌரவம் மக்கள் உள்ளத்தில் உதயமாக வேண்டும்; அதற்கு மக்கள் வாழ்வு உண்மைச் சுதந்திர வாழ்வாக மாறவேண்டும்.

உழைக்கும் வாய்ப்பு; தக்க ஊதியம், உணவு, உடை, வீடு, கல்விபோன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும் வகையில் பொது மக்கள் வாழ்க்கை நடத்தும் நாள் என்நாளோவென்று ஏங்கும்போது, தேசிய கொடிக்கு எப்படி கௌரவம் கிடைக்கும்?

பொருளாதார சமுதாய அடிப்படையில் நாடு முழுவதுக்கும் பூரண சுதந்திரம் இன்னும் எட்டாத கொம்பிலிருக்கும் பொருளே!

சுதந்திர வாழ்வின் சத்துராதிகள் இங்கு பல வேரூன்றியிருக்கின்றன. இந்த அழகிய சிறு நாட்டையே மோசடி உலகமாக்கி விட்டன. காசோலை, போலிக் கையெழுத்து மோசடி; கல்வித் திணைக்களத்தில் இடமாற்ற உத்தரவில் மோசடி வெளிநாட்டு வேலை முகவர்கள் அனேகர் திட்டமிட்டு நடத்தும் மோசடி; வெளிநாட்டு வர்த்தகர்கள் முதலீட்டில் 'பக்கா' மோசடி இரத்தினக்கல், போதைப் பொருள் கடத்தல் மோசடி; சுங்க இலாகா மோசடி இன்னும் அநேகர் நாட்டின் பொருளாதாரத்தை மட்டுமல்ல, சுயமரியாதையையே அடகு வைக்கும் அடாத்தான செயல்கள்.

அரசன் தொடக்கம் ஆண்டி வரைக்கும் உழைப்பால் மேன்மையடைய உதவும் அபிவிருத்தித் திட்டமும், மக்கள் தங்கள் பண்பாட்டின் பழமைக்குரித்தான தினசரி வாழ்வுமே நாட்டை மீட்டு சுதந்திரப் பாதையில் இட்டுச் செல்ல உதவும் இரு சக்கரங்கள்.

## ஆலயத்திற்கு குழாய்க்கிணறு

(வவனியா)

புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட குழாய்க்கிணறு தைப்பூச தினத்தன்று பிரபல வர்த்தகர் திரு. மு. பொன்னுத்துரை என்பவரால் திறந்துவைக்கப்பட்டது. ஆலய புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (அ)

# 'சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை இன்னும் உருவாகவில்லை'

### - கூட்டணித் தலைவர் 'சிவா'

[யாழ்ப்பாணம்]

சுதந்திரதினம் தொடர்பான எந்தக் கொண்டாடத்திலும் கலந்து கொள்வதில்லையென தமிழர் விடுதலைக் கூட்டணி எம்பிக்கள் முடிவு செய்துள்ளார்கள்.

சுதந்திர தினக்கொண்டாட்டங்களில் தமிழினம் கலந்து கொள்ளக் கூடாதென்று கூட்டணியின் தலைமைப்பீடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழினம் சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை இன்னும் உருவாகவில்லையென்றும், எமது இனத்துக்கே சுதந்திரம் கிடைக்காத நிலையில் எப்படி இத்தகைய தின வைபவங்களில் நாம் பங்குகொள்ள முடியுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம் சிவசிதம்பரம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனவே தமிழினம் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாதென்றும் அவர் தமிழ் மக்களைக் கேட்டுள்ளார். [வெ]

# தெல்லிப்பளை புற்றுநோய் சிகிச்சைநிலையம் ஏப்ரலில் இயங்கும்

(காங்கேசன்துறை)

"மக்களிடையே ஏற்படும் நோய்களில் அநேகமானவற்றை ஆரம்பத்திலே கண்டு பிடித்தால் குணப்படுத்தமுடியும். மக்கள் அசிரத்தையாக இருப்பதால் நோய்கள் அதிகரித்து மரணத்தைத்தழுவ நேரிடுகிறது. ஆகவே சுகாதாரத் தொண்டர்கள் கிராமங்கள் தோறும் நோய்கள் பற்றிய விளக்கங்களையும், நோய்த்தடுப்பு முறைகளையும் மக்களுக்கு போதித்து நோய்களிலிருந்து மக்களைக்காப்பாற்றவேண்டும்.

இவ்வாறு காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக தாதிமார் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற சுகாதார தொண்டர்களுக்கான கருத்தரங்கில் பேசிய காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் கூறினார்.

சுகாதாரப் பகுதியினரும், மனித முன்னேற்ற நிலையத்தினரும் இணைந்து இந்த கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தனர்.

திரு. தெய்வேந்திரன் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது!

நோய்களை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து குணப்படுத்துவது தொடர்பாக தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. காலியிலும், காங்கேசன்துறையிலும் தற்போது புற்றுநோய் பற்றிய ஆய்வு நடைபெறுகிறது இப் பகுதிகளில் உள்ள 20வயதிற்கு மேற்பட்ட சகலரும் இந்த ஆய்வுக்குட்படுத்தப்படுவர். மகரகம புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் இடம்பெற்ற ஆய்வொன்றில் 40 வீதமானவர்கள் வாயில் புற்றுநோய்க்குள்ளாவதாக தெரியவந்துள்ளது. இவ்வாறு வாயில் ஏற்படும் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்தால் மாற்ற முடியும்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அமைக்கப்படும் புற்றுநோய் சிகிச்சை நிலையம் எதிர்வரும் ஏப்ரலில் இயங்கத்தொடங்குமென தெரிவிக்கப்படுகிறது. இங்குள்ள புற்றுநோயாளர்களுக்கு இலகுவாக சிகிச்சையளிக்க இதன் மூலம் வழிபிறக்கும்.

நமது மத்தியில் குஷ்டநோய் முன்பு இருக்கவில்லை. புங்குடுதீவில் மட்டுமே சிலருக்கு காணப்பட்டது ஆனால் தற்போது வட்டுக்கோட்டை சங்கானை பகுதிகளிலும் இந்நோய் காணப்படுவதாக கூறப்படுகிறது. மக்கள் நோய்களை ஆரம்பத்திலேயே குணப்படுத்த முன்வந்தால் நோய்களைக் களையமுடியும் என்றார்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பராமரிப்புத்திட்ட உத்தியோகத்தர், திரு. சீவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

சுகாதார சேவையில் ஈடுபடும் தொண்டர்கள் எதனையும் எதிர்பாராது சேவையை நோக்கமாகக் கொண்டு செயல்படவேண்டும். மலைநாட்டிலும் தென்பகுதியிலும் இவ்வாறு சுகாதாரத் தொண்டர்கள் செயல்படுகின்றபோதும் வடபகுதியில் மிகுந்த கடமையுணர்வுடன் செயல்படுவது பாராட்டத்தக்கது என்றார்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. எஸ். சிவமகராஜா தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மகளிர்திட்டத் தலைவி திருமதி சு. கந்தையா உட்பட பலர் பேசினர்.

சுகாதாரத்தொண்டர்களுக்கு ஆலோசனைகளும், வைத்திய முறைப் போதனைகளும் மேற்கொள்ளப்பட்டது.

## கேதீச்சரத்தில் துவஷ்டாமன்னர் நினைவுமண்டபம் நிறுவப்படும்

(நீர்வேலி)

திருக்கேதீஸ்வரத்தில்ஆலயம் அமைத்து லிங்க வழிபாடு செய்துவந்ததாக வரலாறு கூறும் "துவஷ்டா மன்னரின்" நினைவாக துவஷ்டா மணிமண்டபம் ஒன்றை அமைக்கவேண்டும், அந்த மண்டபம் அமைப்பதற்குரிய பணத்தைப்பொது மக்களிடமிருந்து திரட்ட வேண்டும்.

மேற்கண்டவாறு அண்மையில் யாழ்ப்பாணம் மலாயன் பென்சனியர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற அச்சங்கப் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத் தலைவர் திரு. தா. க. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி மண்டப அமைப்புக் குழுவாகவும் புதுவருட நிர்வாக சபையாகவும் பின்வருவோர் தெரிவுசெய்யப்பெற்றனர்.

தலைவர்: தா. க.பொன்னுத்துரை ஜே பி., உபதலைவர்: ச. வடிவேலு, செயலாளர்: இ. பரராசசிங்கம், உபசெயலாளர்: சு. பாலகிருஷ்ணன், பொருளாளர்: க. ச. கந்தையா, உப பொருளாளர்: மு. பொன்னுச்சாமி.

உறுப்பினர்கள்: க. காங்கேசன் (கோப்பாய்), க. பொன்னையா (மன்னார்), செ. நடராசா (யாழ்ப்பாணம்), வ. மாணிக்கம் (திருநெல்வேலி), ஆ. பரமானந்தம் [யாழ்ப்பாணம்], சி. கனகரத்தினம் [உடுப்பிட்டி], சி. வ கந்தசாமி ஆச்சாரி (சாவகச்சேரி], க. பசுபதி [பருத்தித்துறை], நா. செல்லையா [சங்கானை].

## தீர்மானம்

(நீர்வேலி)

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு கடந்தகாலங்களில் நியாயமான அளவு வெளிநாட்டு விதை உருளைக்கிழங்கு பெற்றுக்கொடுத்தது போன்று தொடர்ந்தும் பெற்றுக்கொடுக்கவேண்டும்.

எனவே, வெளிநாட்டில் இருந்து உருளைக்கிழங்கு இறக்குமதி செய்வதில்லையென்ற அரசாங்கத்தின் கொள்கையை மீளாய்வு செய்யும்படியும் அமைச்சைக் கேட்கவேண்டுமென யாழ்மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசத்தின் ஆதரவில் நடைபெற்ற கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கருத்தரங்கு தென்மராட்சி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சமாசத் தலைவர் திரு. வி. சிவமகாராசா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் யாழ் மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. ச. தலைவர்களும் கமத்தொழில் விரிவுப்பெருக்க் குழு தலைவர்களும் சமூகமாயிருந்தனர்.

வலிகிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. ச. தலைவர் திரு. செ. சபாரத்தினம் அவர்களால் கொண்டுவரப்பட்ட இத் தீர்மானத்திற்கேற்ற நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு உபசபையும் தெரிவுசெய்யப்பட்டது. (இ)

## நாட்டை உயர்த்துவமே நன்கு

அந்தநாள் அந்நியரின் ஆட்சிக்குட் பட்டுழன்றோம்
வந்தமுதி தேயத்து அந்நியரும்-தந்தம்
பாஷை மதம்பரப்பிப் பாங்காய்ப் பொருளீட்ட
ஆசைப்பட் டாண்டார் எமை.

இந்தநாள் அந்நியர் இடுக்கண் தளையறுத்து
வந்தோம் சுதந்திரம்சேர் மக்களாய்-இந்தச்
சுதந்திரத்தால் ஈழமக்கள் துக்கமுற வாழ
இதஞ்செய்வாய் ஈசனே ஈங்கு.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிப் பயனடைய
உற்ற அனைவரதும் ஒத்துழைப்பும்-பெற்றுவிட்டால்
நாட்டுக் கபிவிருத்தி நாடோறும் செய்தெங்கள்
நாட்டை உயர்த்துவமே நன்கு

வெண்பாமணி முருகசூரியன்

# 'தமிழீழ இயக்கத்துக்கும் கொலைகளுக்கும் சம்பந்தம் இருந்தது என்பதே எனது கருத்து'

## குறுக்கு விசாரணையில் ஏ. எஸ். பி. ஹேமச்சந்திரா

(இ. கந்தசாமி)

நீர்வேலி மக்கள் வங்கிக் கொள்ளை, கொலை வழக்கின் விசாரணைக்குள்ளான விசாரணையில் தொடர்ந்து ஏ. எஸ். பி. ஹேமச்சந்திரா சாட்சியமளித்தார். சிரேஷ்ட சட்டத்தரணி திரு. சத்தியேந்திரா குறுக்கு விசாரணை செய்தார்.

சத்: ஆகஸ்ட் 11ம் திகதியும் 6ம் எதிரியை விசாரித்ததாகக் கூறியிருந்தீர்?

சா: ஆம்.

சத்: இரண்டரை மணித்தியாலம் கேள்வி கேட்டதாகக் கூறினீர்?

சா: ஆம்.

சத்: எது சம்பந்தமாகக் கேள்வி கேட்டீர்?

சா: அவருடைய கடந்த காலத்தையும் பின்னணியையும்பற்றிக் கேள்விகேட்டேன்.

சத்: வேறு ஏதாவது பற்றிக் கேட்டீரா?

சா: நீர்வேலி வங்கிக் கொள்ளை இரட்டைக் கொலைச் சம்பவத்துக்கு முன் நடந்த விஷயங்கள் பற்றியும் கேள்வி கேட்டிருப்பேன்.

### வன்செயல்பற்றிக் கேட்டேன்

சத்: நீர்வேலி சம்பவத்துக்கு முன் நடந்த எந்தச் சம்பவங்கள்பற்றிக் கேட்டீர்?

சா: நீர்வேலி கொள்ளைச்சம்பவத்துக்கு முன் நடைபெற்ற வன்செயல் சம்பவங்கள் குறித்துக் கேட்டேன்.

சத்: 6ம் எதிரியை விசாரித்தபோது தமிழ் ஈழ இயக்கத்துடன் இக்கொலைகள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் இருந்ததா?

சா: இவற்றை நான் பயங்கரவாதச் செயல்கள் என நினைக்கவில்லை. இவை குற்றச் செயல்கள் என்றே நினைத்தேன்.

சத்: தமிழ் ஈழ இயக்கத்துடன் இக்கொலைகள் சம்பந்தப்பட்டிருந்ததுபற்றித் தெரியுமா இல்லையா என உம்மைக் கேட்கவில்லை. எனது கேள்வி என்னவெனில், 11ம் திகதி 6ம் எதிரியை விசாரித்தபோது தமிழ் ஈழ இயக்கத்துக்கும் இந்தக் கொலைகளுக்கும் சம்பந்தம் இருந்ததென்று சந்தேகம் இருந்ததா?

சா; அதுதான் எனது அபிப்பிராயம்.

சத்: தமிழ்ஈழ இயக்கத்துடன் அவருக்கு சம்பந்தம் இருக்கின்றதா என அவரிடம் கேள்வி கேட்டீரா?

சா: வன்செயல் பற்றியே விசாரித்தேன்.

### தமிழ் ஈழம்பற்றி கேள்வி கேட்கவில்லை

சத்: நான் மீண்டும் கூறுகிறேன் நீங்கள் எனது கேள்விகளிக்குப் பதில் தராது நழுவப் பார்க்கிறீர்கள். நான் அக்கேள்வியை மீண்டும் கேட்கிறேன். ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி 6ம் எதிரியிடம் கேள்வி கேட்டபோது தமிழ் ஈழவிடுதலை இயக்கத்துடன் அவருக்கு தொடர்புண்டா என்று கேட்டீரா?

சா: நான் வன்செயல் பற்றியே கேள்வி கேட்டேன். தமிழ்ஈழம் பற்றி கேள்வி கேட்கவில்லை.

சத்: 12ம் திகதி 6-ம் எதிரியை இரண்டரை மணித்தியாலம்வரை கேள்வி கேட்டீர்?

சா: ஆம்.

சத்: அன்று அது சம்பந்தமாக கேள்வி கேட்டீர்?

சா: யாழ்ப்பாணப்பிரதேசத்தில் துப்புத்துலக்கப்படாமல் மர்மமாக இருந்துவந்த வன்செயல்கள் பற்றி கேள்வி கேட்டேன்.

### சி. ஐ. டி. அதிகாரிகள் கொலைபற்றி

சத்: மர்மமாக இருந்த எந்த வன்செயல் பற்றி கேள்வி கேட்டீர்.

சா: மடுவில் நடைபெற்ற சி. ஐ. டி. அதிகாரிகள் நாலவரின் கொலை மற்றும் வன்செயல்கள் சம்பந்தமாக கேள்வி கேட்டேன் கேட்டவை எல்லாமே ஞாபகம்இல்லை.

சத்: மடுவில் நடந்த 4 சி. ஐ. டி. அதிகாரிகளின் கொலைகள் சம்பந்தமாகவும் வெளிநாடுகளில் 6ம் எதிரி செய்த செயல்களையும்விட வேறு ஏதும் பற்றி விசாரித்திரா?

சா: ஞாபகமில்லை.

சத்: மடுகொலை பற்றி என்ன கேட்டீர், மடுவில்நடைபெற்ற கொலைகளைச் செய்தவர்கள் யார்? என்றும் அங்கு கொலைசெய்யப்பட்டவர்களைத் தெரியுமாஎன்றும் கேட்டேன்.

சா: கொலை செய்தவர்கள் யாரெனத் தெரியாது என்றும் உமாமகேஸ்வரன் குழுவினரே இக்கொலைகளைச் செய்ததாகக் கேள்விப்பட்டதாகவும் கூறினார்.

சத்: மடுகொலைபற்றிவேறு என்ன கூறினார்.

சா: தமது குழுவினர் அக்கொலையைச் செய்யவில்லை என்றும் கூறினார்.

சத்: 6ம் எதிரியின் வெளிநாட்டு செயல்கள்பற்றி என்ன கேட்டீர்.

சா; இந்தியாவிலும் ஜெர்மனியிலும் நீங்கள் என்ன செய்தீர்கள் என்றுகேட்டேன்.

சத்: அந்நாடுகளில் தாம் செய்த செயல்களை அவர் கூறினார்.

சா: ஆம்.

சத்: அதுபற்றி அவர் கூற எவ்வளவு நேரம் எடுத்திருக்கும்.

சா: சரியாகக் கூற முடியாது. அரைமணித்தியாலம் எடுத்திருக்கும்.

சத: நீர் கேட்ட வேறு கேள்விகள் பற்றி ஞாபகம் உண்டா?

சா: நடைபெற்ற வன்செயல்கள் அவர்கள் வைத்திருந்த ஆயுதங்கள் பற்றி கேள்வி கேட்டிருப்பேன்.

சத்: அவர்கள் வசம் இருந்த ஆயுதங்கள் பற்றி கேட்ட கேள்வி ஞாபகம் உண்டா?

சா: ஆம்.

சத்: ஆயுதங்கள் பற்றி 6ம் எதிரியிடம் கேட்ட கேள்வி என்ன?

சா: அவர்கள் வசம் இருந்த ஆயுதங்களின் வகைகள், பாவிக்கும் விதம், பாவிக்கத் தகுதியானவர்கள், கைக்குண்டுகள் பற்றி கேட்டேன்.

சா: எனது ஞாபகத்தின் படி சந்திக்கவில்லை.

சத்: இந்த விடயத்தில் நீர் உண்மையைக் கூறவில்லை என்கிறேன்.

சா: அப்படி அல்ல.

சத்: அந்தக்காலத்தில் மேஜர் அல்கம எங்கு கடமையாற்றினார்.

சா: தெரியாது.

சத்: உங்கள் வாழ்நாளில் அவரைச் சந்தித்தீரா?

சா—அவரை கொழும்பிலும். யாழ்ப்பாணத்திலும சந்தித்திருக்கிறேன்.

முகாமில் அல்கமவைச் சந்தித்தீரா?

சத்-நீர் யாழ்ப்பாணத்தில் அவரைச் சந்தித்தபோது அவர் கொழும்பில் கடமையாற்றினார்?

சா—ஆம்.

சத்— 3ம் எதிரியின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்வதற்காக ஏ. எஸ். பி. ஜுரம்பதிக்கு உதவி செய்யும்படி உமக்கு பணிக்கப்பட்டிருந்ததாகக் கூறினீர்?

சா—ஆம்.

சத்-எப்போது வாக்குமூலம் எடுத்தீர்?

சா-3ம் எதிரியை 9ம் திகதி கேள்வி கேட்டேன்.

சத்-அப்போது என்னமுறையில் ஜுரம்பதிக்கு உதவினீர்?

சா-எதிரியிடம் சில கேள்விகள் கேட்டதன்மூலம் ஜுரம்பதிக்கு உதவியிருப்பேன்.

சத்-3ம் எதிரியை தாக்கியதன்மூலம் அவருக்கு உதவவில்லையா?

சாட்-இல்லை. அவரைத் தாக்குவதற்கு எந்தவித தேவையும் ஏற்படவில்லை.

சத்-அனுபவமுள்ளபொலிஸ் அதிகாரிகளான நீங்கள்கேள்வி கேட்கும்போது தாக்குவதற்கு எப்போதாவது காரணம் இருந்திருக்குமா?

சா—எனது அனுபவத்தின் படி சிறந்த விசாரணையாளருக்கு எவரையும் தாக்கவேண்டிய தேவை இருக்காது.

சத்: ஏப். 10ம்திகதி 3ம்எதிரியிடம் எதுபற்றி கேள்வி கேட்கப்பட்டது.

சா: நீர்வேலி வங்கிக் கொள்ளைபற்றி கேள்வி கேட்டு வாக்குமூலம்பதிவுசெய்தோம்.

சத்: இதுசம்பந்தமாக ஏப்ரலில் பனுகொடையிலிருந்து 3ம் எதிரியுடன் யாழ்ப்பாணம் சென்றீரா?

சா: ஆம்.

சத்: அங்கு சென்ற இடத்தில் கொள்ளையடிக்கப்பட்ட ஆயுதங்கள்எதையாவதுகண்டுபிடிக்கமுடிந்ததா?

சா: இல்லை.

சத்: பணம் ஏதாவதுகிடைத்ததா?

சா: இல்லை. நாம் அங்கு சென்றபோது பணமும் ஆயுதங்களும் வேறுஇடத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது. (சாட்சி பதிலுக்கு மேலாக வேறுசில விபரங்களைக் கூறுகிறார்)

சத்: தேடுதல் நடவடிக்கை தோல்வியுற்றதால் விரக்தி அடைந்திருந்தீர்களா?

சா: அதற்கு அவசியமில்லை அது தேவையற்ற முயற்சியாக இருந்தது.

சத்: அந்த தோல்வியை அமைதியாக ஏற்றுக்கொண்டீர்களா?

சா: ஆம்.

சத்: இத்தோல்வியை அடுத்து ஆனையிறவு முகாமில் உள்ள சித்திரவதைக்கூடமான பழைய வாடி வீட்டிற்குள் சந்தேக நபர்கள் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

சத்: நான் அதை மறுக்கிறேன்.

ஆனையிறவு இராணுவ முகாமில் நீங்களும் மற்ற அதிகாரிகளும் திட்டமிட்ட வகையில் எதிரிகளைச் சித்திரவதை செய்து வாக்குமூலம் பெற்றீர்கள்.

சா: நான் அதை மறுக்கின்றேன்.

சத்: எதிரிகளை ஆனையிறவு முகாமில் சித்திரவதை செய்தபோது தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு மிளகாய்தூள் புகையும் பிடித்தீர்கள்.

### கடவுளுக்கு பயந்தவர்

சா: நான் அதை மறுக்கி

[8-ம் பக்கம் பார்க்க]

# 'எதிரியுடன் சென்றபோது பணமும் ஆயுதங்களும் இடம் மாற்றப்பட்டிருந்தன'

சத்: 6ம் எதிரியிடம் முன்பு நடந்த வன்செயல்கள்குறித்து என்ன கேள்விகள் கேட்டீர்?

சா; நீர்வேலி சம்பவத்திற்கு முன் நடந்த வன்முறைச் சம்பவங்கள்பற்றியும் நீங்கள் அவற்றில் சம்பந்தப்பட்டீர்களா என்றும் கேட்டேன்.

சத்: குறிப்பாக என்ன சம்பவம்பற்றிக் கேட்டீர்?

சா: கொலைகள், வங்கிக் கொள்ளைகள் சம்பந்தமாகக் கேட்டேன்.

சத்: எந்த வங்கிக் கொள்ளை சம்பந்தமாகக் கேட்டீர்?

சா: 78ம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற நல்லூர் வங்கிக் கொள்ளை சம்பந்தமாகக் கேட்டேன்.

சத்: வேறு வங்கிக் கொள்ளை பற்றிக் கேட்டீரா?

சா: வேறு வங்கிக் கொள்ளைகள் குறித்துக் கேட்டதாக ஞாபகமில்லை.

சத்: 6ம்எதிரியை சில கொலைச் சம்பவம்பற்றி விசாரித்ததாகவும் கூறினீர்கள்?

சா: ஆம். கான்ஸ்டபிள் ஞானசம்பந்தன் கொலை: இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை; இன்ஸ்பெக்டர் குருசாமி கொலை; ஒரு இரட்டைக் கொலை மற்றும் கொலைகள் பற்றி.

சத்: இவற்றுக்கு 6ம் எதிரி தந்த பதில்களைப் பதிவுசெய்தீர்களா?

சா: 11ம், 12ம் திகதிகளில் எதுவித குறிப்பும் எடுக்கவில்லை.

### தமிழ் ஈழத்துக்கும் தொடர்புண்டா?

சத்: இக்கொலைகள் பற்றி

சத்: 12ம் திகதி 6ம் எதிரியிடம் கேள்வி கேட்டபோது குறிப்பெடுத்தால் பயன்தரும் என எண்ணவில்லையா?

சா: வாக்குமூலம் எடுக்க இருந்ததால் குறிப்பெடுக்கவில்லை.

சத்: நீங்கள் இந்த விஷயத்தில் உண்மையைக் கூறவில்லை என்கிறேன்.

சா: நான் அதை மறுக்கிறேன்.

சத்: 81ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ம் எதிரியின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்ய ஏ. எஸ். பீ. ஜுராம்பதி அவர்களுக்கு உதவியதாகக் கூறினீர்கள்?

### ஆனையிறவு முகாமில்

ஏப்ரல் 16ம் திகதி ம... பனுகொடை இராணுவ முகாமிலிருந்து ஆனையிறவு முகாமுக்கு சென்ற குழுவில் நீங்களும் இருந்தீர்களா?

சா: ஆம்.

சத்: 17ம் திகதி ஆனையிறவு முகாமில் தங்கியிருந்த குழுவில் நீங்களும் இருந்தீர்கள?

சா: ஆம்.

சத்: ஆனையிறவு முகாமில் எதுவரை தொடர்ந்து தங்கியிருந்தீர்கள்.

சா: ஏப்ரல் 29ம் திகதிவரை அங்கு தொடர்ந்திருந்தேன். அதன்பின் இடையிடையே அங்கு சென்றுவந்தேன்.

சத்: மேஜர் அல்கமவை அக்காலத்தில் சந்தித்தீரா?

சா: இல்லை எனக்கு ஞாபகமில்லை,

சத்: அவரைக் காணவில்லை என்று கூறுகிறீர்?


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு "மேற்கு ஜெர்மனி 'BASF'" தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்

500 கிராம் ரூபா 13/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்

297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

தொலைபேசி: 32941-5

Metropolitan

# கிளிநொச்சி செய்திகள்

### பாடசாலைக்கு அன்பளிப்பு

கண்டாவளை அரசினர் வித்தியாசாலைக்கு நீரிறைக்கும் இயந்திரமொன்றை கல்விப் பகுதியினர் வழங்கி உள்ளனர். வித்தியாலய அதிபர் சு. தர்மரெத்தினம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாகவே இந்த இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

### கோரிக்கை

கிளிநொச்சி 153-ம் கட்டையில் உள்ள மாணவர்கள் நலன் கருதி பாடசாலை ஒன்றை நிறுவமுன்வரவேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்றை கிளிநொச்சி பங்குத்தந்தை வண பிதா பயஸ் அடிகளார் கல்விப் பகுதியினருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

### அமைச்சரிடம் வேண்டுகோள்

கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள கிளிநொச்சி பகுதி மாணவர் நலன் கருதி கல்வி மூலவள நிலையம் ஒன்றை இங்கே அமைக்குமாறு கிளிநொச்சி பிரதேச மாணவர் ஒன்றியத்தினர் கல்வி அமைச்சரை கோரியுள்ளனர். பிரஸ்தாப மாணவர் ஒன்றிய அமைப்பாளர் ரி. தர்மானந்தசிவம் இதுசம்பந்தமாக அரசினருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

### தொண்டர் பயிற்சிவகுப்புகள்

காந்திய இயக்கத்தினால் நடத்தப்படும் யுவதிகளுக்கான சர்வசக்தி தொண்டர் பயிற்சி வகுப்புக்கள் கிளிநொச்சி குருகுலத்திலும் வவனியா காந்தீயச் சிறுவர் இல்லத்திலும் ஆரம்பமாகி உள்ளது. குருகுலநிர்வாகி திரு. திரு வே. கதிரவேலும் காந்தீய அமைப்பு செயலாளர் திரு. ப. வை. ஜெயபாலனும் இப்பயிற்சிக்கு பொறுப்பாக உள்ளனர். 70 யுவதிகள் இப்பயிற்சியை பெறுகின்றனர்.

### இடமாற்றம்

கிளிநொச்சிபொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் பிரேமதாசா நுகேகொடைக்கு இடமாற்றபபட்டுள்ளார். இவர் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இங்கு கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கழிவுநீர் அசிங்கம்

கிளிநொச்சி நகரின் கழிவுநீர், மத்திய பஸ்நிலையத்திற்கு எதிரே உள்ள விற்பனை அபிவிருத்தி திணைக்களம் முன்பாக தங்கி சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தி உள்ளது. இதலிருந்து துர்நாற்றம் வீசுவதால் பிரயாணிகளும் பிரஸ்தாப திணைக்கள ஊழியரும் சிரமமடைகின்றனர்.

### மின்பாவனையாளர் பிரச்னை

கிளிநொச்சி நகரின் மின் கட்டணஉயர்வை ஆட்சேபித்தும் மின்சாரசீர்கேடுகளை தொகுதி எம். பிக்கு எடுத்து விளக்கு முகமாகவும் திரு. மு. யோகலிங்கம் தலைமையில் மின்பாவனையாளர் கூட்டமொன்று நடைபெற்றது. திரு. வி. ஆனந்தசங்கரி எம். பியும் அவரது செயலாளர் திரு. இ. கிருஷ்ணராசாவும் கலந்து கொண்டு உரையாற்றினர்கள். யாழ். மாவட்டசபை கிளிநொச்சி உப அலுவலக அசமந்த போக்குபற்றியும் மின்பாவனையாளர் நிலைபற்றியும் எம். பியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

### பாராட்டு

கிளிநொச்சி கல்விவட்டார அதிபர்களில் கடந்த ஆண்டு ஒரு நாள் தன்னும் லீவு எடுக்காமல் கனகாம்பிகை குளம் வித்தியாலய அதிபர் பொன். தில்லைநாயகம் பணிபுரிந்து பலரது பாராட்டையும் பெற்றுக் கொண்டார். திரு. வி. ஆனந்தசங்கரி எம். பியும் இவரது சேவையை வலுவாகபாராட்டி இம்முன்மாதிரியை ஏனையோரும் பின்பற்ற வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### பூர்த்தி

கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் உருவாகிவரும் இருமாடிக் கட்டிட வேலைகளில் 1ம் கட்ட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. மிகக் குறுகிய நாட்களில் முதல்மாடிக் கட்டிடத்தை பூர்த்திசெய்த கல்வித்திணைக்கள கட்டிடப்பகுதியினரை வித்தியாலய அதிபர் ஏ. கே. இராசேந்திரம் பாராட்டியுள்ளார்.

### யானைகள் அட்டகாசம்

கிளிநொச்சி தொண்டமான் நகரில் மீண்டும் யானைகள் அட்டகாசம் செய்துள்ளன. இதனால் இருபத்தைந்து வீடுகள் பலத்த சேதமடைந்ததுடன் பயிர் வகைகளும் நாசமடைந்தன. தொண்டமான் நகர் கிராம முன்னேற்றச் சங்கத்தலைவர் திரு. கணபதி கிளிநொச்சி எம். பி க்கும் அமைச்சர் தொண்டமானுக்கும் இது பற்றி புகார் தெரிவித்துள்ளார்.

## தவறணைகள் மூடப்படும்

(கொழும்பு)

சுதந்திரதினத்தை யொட்டி இம்மாதம் 4ம், 5ம், 6ம் திகதிகளில் சகல தவறணைகளும், வெளிநாட்டு மதுபானச்சாலைகளும் மூடப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.


இம்மூன்று தினங்களும் நாட்டிலுள்ள ஹோட்டல்களின் மதுபானச்சாலைகள் மூடப்பட வேண்டுமென்றும் பணிக்கப்பட்டுள்ளது.

## இக்கவிஞருக்கு இன்று 60 வயது

ஈழத்தின் சிறந்த எழுத்தாளர் வரிசையில் நல்ல இடம் பெற்ற முருகவேபரமநாதன் அவர் ஒரு இலைமறைகாய் தான் தன்னைமற்றவர்கள் இனம்கண்டு கொள்ளாமல் வாழும் அவர் சிறந்த ஆசிரியரும் கூட. பேச்சாளர் எழுத்தாளர் சிந்தனையாளர் முற்போக்குவாதி ஆத்மீகச் செல்வர் வானொலிக்கலைஞர் என்றெல்லாம் போற்றப்படுமவர் ஓர் கவிஞரும் கூட. ஊரெழுவில் கோவில்கொண்டமீனாட்சி மீது அருமையான பதிகமே பாடியுள்ளார் வல்லிபுரம் என்னும் புண்ணிய பூமியில் பிறந்த அவர் வல்லிபுர ஆழ்வார் மீது பள்ளியெழுச்சி பாடிய புலவர் கு. பெரியதம்பியவர்களின் நூலை வெளியிட்டுள்ளார். வல்லிபுர ஆழ்வார் கெருடன் விடுதூது என்னும் பிரபந்தத்தை வெளியிட்டவரும் அவரேதான். வல்லிபுரக் கோவிலின் வரலாற்றைப் பூரணமாக எழுதிமுடித்து வெகு சீக்கிரம் நூல்வடிவில் வெளியிடமுயன்று கொண்டிருக்கும் கவிஞருக்கும் வயது அறுபது ஆரம்பமாகும் இப் புனித நாளில் – கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமத்தின் தலைவர் ஸ்ரீமதி வடிவேல்சுவாமிகள் வாழ்த்துரை வழங்கி அவரைப் பெருமைப்படுத்தியுள்ளார்.

ச. வேலழகன்
சுன்னாகம்


# வளரும் பருவத்தில் தவறாது பருகவேண்டிய நெஸ்பிறே.



உலகெங்கிலும் தமது அன்புக் குழந்தைகளின் நலனில் அக்கறையுள்ள தாய்மார் நெஸ்பிறே பாலையே அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஏனெனில், நெஸ்பிறே உலகின் வளம் மிக்க பண்ணைகளில் இருந்து கிடைக்கும் சுத்தமான, சத்துமிக்க பாலில் தயாரிக்கப்படுகின்றது. நெஸ்பிறே சர்வதேச தராதரங்களுக்கேற்ப மிகச் சுகாதாரமான முறையில் பொதிசெய்யப்படுகின்றது. பாலின் புரதச் சத்துகளும் விற்றமின்களும் அதில் நிறைந்துள்ளன.

உங்கள் பிள்ளையை நெஸ்பிறேயில் வளருங்கள். காலை, மாலை, பகல்... எவ்வேளையும்... பசியோ தாகமோ ஏற்படும் எல்லா நேரத்திலும் அவர்கள் நெஸ்பிறே பருகட்டும். நித்திரைகொள்ளும் முன்பும் நெஸ்பிறே கொடுங்கள். தினமும் ஓடியாடிச் சுறுசுறுப்பாக வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்பிறே சக்தியை வழங்குகின்றது. உங்கள் பிள்ளைகள் ஆசையோடு பருகி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்வதைக் கண்டு மகிழுங்கள். இன்றே உங்கள் பிள்ளைக்கு நெஸ்பிறே கொடுங்கள்.






400 Grams Rs 26/90 800 Grams Rs 98/25

Nestlé
ஒரு நெஸ்லே தயாரிப்பு

# நெஸ்பிறே®

வளரும் பருவத்திற்கு வாய்த்த பால்.

Grant K & E 4787

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

வின்ஸர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
(கலர்)
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
Today only
NORMAN RAE
(Adults only)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ஆந்திரா முதலமைச்சர்
என். டி. ராமராவ், ஜெமினி
சாவித்திரி நடித்த
மாயா பஜார்

ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா-
முத்துராமன் - என். டி. ராமராவ்
கர்ணன்
(ஈஸ்ட்மன் கலர்)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

## மணற்காடு வெற்றி

(புலோலி)

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் அல்வாய் மனோகரா இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கும். அல்வாய் மனோகரா இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் 2 கோல்களால் வெற்றியீட்டியது.


வெலிங்டன்... வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
இன்று மட்டும்
இதயக்கனி

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும்
ரயில் (கலர்

றீகல் (யாழ். நகர்)
கடைசி
சில தினங்கள்
எங்க வீட்டுப் பிள்ளை

சாந்தி யாழ்.
தினசரி 5 காட்சிகள்
Robert Shaw-Lee Marvin
AVALANCHE EXPRESS
Action-Thriller-Colorscope

மனோகரா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-15, 6-00, 9-30



ஆந்திரா முதலமைச்சர் N. T. ராமராவ்
K. மாலதி - S. V. ரங்கராவ் - ரேலங்கி
நடித்த
பாதாள பைரவி
மந்திரம் தந்திரம் மயிர்கூச்செறியும் பயங்கரச்சண்டைகளை
வெண்திரையில் காணத்தவறாதீர்கள்
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

ரயில் பிரயாணத்தின் போது

# தலையை வெளியே நீட்டியவர் பாலத்துடன் மோதி மரணம்!

(கொழும்பு)

ரயில் வண்டியில் வெளியே தலையை நீட்டியவாறு பிரயாணஞ்செய்த இராணுவ வீரர் ஒருவர் பால மொன்றில் மோதுண்டு மரணமானார்.

இப்பரிதாப சம்பவம் வெலிகம, அஹன்கம என்ற, இரு ரயில் நிலையங்களுக்கிடையில் இடம்பெற்றது.

இறந்த இராணுவ வீரர் ஞானசேன என்றழைக்கப்படும் 24 வயதான இளைஞராவார். இவர் தமது இராணுவ சகாக்களுடன் சம்பவதினம் மாத்தறைக்கு கோட்டையிலிருந்து ரயிலிலசென்றுகொண்டிருந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணையில் இறந்தவரான ஞானசேன தாமிருந்த ரயில்பெட்டி வாசல்வழியே தலையை வெளியே நீட்டிக் கொண்டுசென்றிருந்தாரென்றும், பாலம் நெருங்கி வந்ததை அவர் அறியவில்லையென்றும், அதனாலேயே அவரது தலை அப்பாலத்தில்மோதுண்டு மரணம் சம்பவித்ததென்றும தெரிவிக்கப்பட்டது. [கி]

# "தீர்க்கமான முடிவுகளை எடுத்து நிதானமாகச் செயல்படுத்துபவர்"

## கலாநிதி கைலாசுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கலாநிதி கைலாசபதி ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளரும், மாணவ சமுதாயத்தின் சிறந்த வழிகாட்டியும் மட்டுமன்றி தீர்க்கமான முடிவுகளை எடுத்து நிதானமாகச் செயல்படும் ஓர் செயல்வீரன் என முன்னாள் முதலை உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான திரு. எஸ். ஆர். கனகநாயகம் யாழ் பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர்சபைக் கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

இக் கூட்டத்தில் கலாநிதி கைலாசபதியின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது திரு. கனகநாயகம் பேசினார். திரு. எஸ் ஆர். கனகநாயகத்தின் இல்லத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ். பல்கலைக் கழக வேந்தர் திரு. வி. மாணிக்கவாசகர், யாழ். பல்கலைக்கழக உபவேந்தர், திரு. சு. வித்தியானந்தன், முன்னாள் அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவஞானம், முன்னாள் கல்லூரி அதிபர் திரு. ஞானப்பிரகாசம், சட்டத்தரணி திரு. சரவணமுத்து, நிர்வாகக்காரியதரிசி, திரு. எஸ். விஜயரத்தினம், உறுப்பினர் திரு. செல்வரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர். [மயி. நி]

# இன்றைய பலன்

தை மாதம் 22-ந் திகதி
வெள்ளிக்கிழமை
(4—2—83)

மேடம்: சந்திப்பின் மூலம் பயன்உள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள் காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும்விருந்தொன்று கிடைக்கும். மகிழ்ச்சியான தினம்.

இடபம்: ஆணவப் போக்கு அடிசறுக்க வைக்கும், பின்னணியில் மோசடி வேலைகள் நடைபெறலாம், மேலதிகாரிகளின் பார்வை உங்களைத் திகைக்கவைக்கும்.

மிதுனம்: உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும், உறவினர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள், பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுவோர் போற்றப் படுவர்.

கடகம்: பண நெருக்கடிவிலகுவதற்கான அறிகுறிதென்படும், புத்திரர் வழியால் புகழும் கிடைக்கும், இனிமை தரும் செய்தி உண்டு.

சிங்கம்: போதுமென்றமனத்துடன் இருப்பீர்கள், முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்குப் புதிய பாதையைக் காட்டும், குடும்பத்தில் அன்பு உண்டு.

கன்னி: கண்துடைப்புவேலை நடக்கும், கால் நடைகளினால் நட்டமுண்டு. குடும்பத்தில் மூத்த சகோதரத்தினால் மனக்கவலை எல்லோரையும் வாட்டும்.

துலாம்: இனிக்கப் பேசுவோர் விஷயத்தில் எச்சரிக்கை வேண்டும், பிறந்தகத்தின் நினைவு திடீரென தலைதூக்கும் கடமையில் சோர்வு ஏற்படும்.

விருச்சிகம்: அந்தஸ்தில் உயர்வு தென்படும், எதிர் பார்த்த பதவி உயர்வுக்கு இன்று முன்னோடி நடவடிக்கை எடுக்கப்படும், வழக்கு விவகாரங்களில் வெற்றி காண்பீர்.

தனு: குடும்பக் கவலையுடன் குறுக்குவழிக் தலையிடும்தென்படும். சிலரைப்பற்றி புனைந்துரைகளைப் பரப்புவதற்கு முற்படுவர், முடிந்தவரை மௌனம் சாதிக்கவும்.

மகரம்: திடீர் வரவுகளுக்கு இடமுண்டு, வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். பேச்சுவன்மையின் மூலம் பெரிய இடத்து ஆதரவைத் தேடிக்கொள்வீர்.

கும்பம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள், பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும், சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும், அரசாங்க ஊழியருக்கு சிறப்பான நாள்.

மீனம்: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்ளக் கூடும், திரைமறைவில் சதித் திட்டம் நடத்த முற்படுவர்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## இன்று சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள கொண்டலடி வைரவர் கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை காலை ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் நடைபெறுகிறது. [வ]

## ஜனசக்தி வென்றது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடி ஜனசக்தி ச. ச. நிலைய கோஷ்டிக்கும் கைதடி சரஸ்வதி ச. ச. நிலையக் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஜனசக்தி ச. ச. நிலையக் கோஷ்டி 4-0 கோல்களால் வெற்றியீட்டியுள்ளது இப்போட்டி சரஸ்வதி ச. ச. நிலைய மைதானத்தில் நடைபெற்றது

மத்தியஸ்தராக திரு. வ. தம்பித்துரை கடமை ஆற்றினார். (மா)

## புலேந்திரன் கொலை:

# சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்

(வவுனியா)

வவுனியா ஐ.தே.க.அமைப்பாளர் கே.ரி. புலேந்திரன் சுட்டுக்கொலை செய்யப்பட்டது தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களும் நேற்று வவுனியா மாவட்ட நீதிபதி கே. பெற்றியாகொட முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களான எஸ். தேவராஜா, திஸ்ஸ, சரத், பெனடிக்ற், குமாரசிங்கம் ஆகியோரே நேற்று மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

முதலாம், நான்காம், ஐந்தாம் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி எம்' சிற்றம்பலம் ஆஜரானார்.

இரண்டாம், மூன்றும் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி எக்ஸ். எம். சொர்ணபால ஆஜரானார்.

பொலிசார் சார்பில் வவுனியா பொலிஸ் தலைமையதிகாரி சிறில் குணவர்த்தன ஆஜரானார். இச்சந்தேக நபர்கள் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டிருப்பதால் பிணையில் விடுமாறு, இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

பொலிசார் இதனை ஆட்சேபித்தனர். இதனையடுத்து நீதிபதி பிணைவழங்காது விசாரணையை இம்மாதம் 16-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

விசாரணையைப் பார்வையிட நீதிமன்றத்தில் ஏராளமானோர் குழுமியிருந்தனர். (வெ)

## மற்றுமொரு..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்றும் தீ உடனடியாக அணைக்கப்பட்டதால் பஸ்ஸுக்கு சேதமேற்படவில்லை என்றும், பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்சாரதி எஸ். சற்குணராஜாவினதும், நடத்துநர் பி. நவரத்தினத்தினதும் சாதுரியத்தினால் தீ பரவவிடாமல் அணைக்கப்பட்டதாக விசாரணையின் போது தெரியவந்தது.

23 ஸ்ரீ 2225 இலக்கமுடைய இந்த பஸ் யாழ். பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## ஹர்த்தால்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

இராணுவவீரர்கள் தடுத்து நிறுத்தி, பிரயாணிகளை இறக்கிவிட்டு, குறிப்பிட்ட தொகைப்பிரயாணிகளுடன் அந்த மினிபஸ்கள் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும், அவற்றில் பிரயாணம் செய்தவர்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மினிபஸ் நல்லூருக்கு அண்மையில் வைத்து ரோந்து சுற்றி வந்த இராணுவீரர்களால் தடுத்து நிறுத்தப்பட்டு பிரயாணிகள் இறக்கிவிடப்பட்டனராம். அத்துடன் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் அந்த மினிபஸ்கண்டக்டரும் சில பிரயாணிகளும் தாக்குதலுக்குள்ளானதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

### சினிமா காட்சிகள் இல்லை

நேற்று முழுநாளும் சினிமா தியேட்டர்களில் காட்சிகள் காண்பிக்கப்படவில்லை.

சாவகச்சேரி பிரதான சந்தை, மருதனாமடம் சந்தை நெல்லியடிச் சந்தை, யாழ். நகர் சந்தைகளில் நேற்று வெளியூர் வியாபாரிகள் இல்லாததால், வியாபாரம் அதிகமாக நடை பெறவில்லை என்று எமது நிருபர்கள் தெரிவித்துள்ளனர். [மா]

## யாழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்கள், அபிவிருத்தி சபை உப அலுவலகங்கள் ஆகியவற்றிலும் சுதந்திர தின வைபவத்தையொட்டி, இருகொடிகளும் ஏற்றிவைக்கப்படவிருக்கின்றன, [மா]

## 4 நாள் உண்ணா..

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகப் பேராசிரியர் தம்பதிகள் நேற்று மாணவர்களின் உண்ணாவிரதத்தைப் பார்வையிட்டு, நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

கொழும்பு பல்கலைக்கழக சுயேச்சை மாணவர் சங்கத் தலைவர் திரு. திலக் பெர்ணாண்டோ இன்று உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தவுள்ளார்.

கத்தோலிக்க மதகுருமார், கன்னியாஸ்திரிகள், பாடசாலைமாணவர்கள், பொதுமக்கள் நேற்று உண்ணாவிரதத்தில் பங்குபற்றியிருந்தனர்.

### மாணவி மயக்கம்

உண்ணாவிரதமிருந்த மாணவியான செல்வி ராஜமலர் நேற்று மயக்கமடைந்ததால், யாழ். பல்கலைக்கழக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டார். இவர் சில மணிநேரத்தின் பின்னர் மீண்டும் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டார்.

தமிழீழ விடுதலை அணியினரும், சென்று ஆதரவு தெரிவித்தனர்.

### கொக்குவிலில் உண்ணா ம்

மாணவர்கள் மேற்கொண்டிருக்கும் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து இன்று காலை ஏழு மணிதொடக்கம் கொக்குவில் புதுக்கோவில் வீதியில் தமிழீழ விடுதலைக் கழகத்தின் சார்பில் உண்ணாவிரதம் நடைபெறுகிறது.

இன்று பிற்பகல் 4மணிக்கு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர் பழரசம் கொடுத்து 50 மாணவர்களின் உண்ணாவிரதத்தை முடித்துவைப்பர். அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக வளவில் பொதுக்கூட்டம் நடைபெறும். [மா]

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர், பலகாடு ராஜபுரம் நாச்சிமார் கோயில் என்று வழங்கும் திருவருள் மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

## இ. போ. ச.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறங்குமாறு பயமுறுத்தினர்களாம். பிரயாணிகள் இறங்கிக்கொண்டிருக்கும் அதேநேரத்தில் வயதில் குறைந்த இருவர், பிளாஸ்ரிக் 'ரியூ'ப்பில் கொண்டுவரப்பட்ட பெட்ரோலை பஸ்ஸின் டயர்களுக்கும் பஸ்ஸுக்குள்ளும் ஊற்றினர். இதனைத் தொடர்ந்து பஸ்ஸுக்குத் தீ வைக்கப்பட்டது. முற்றாக எரிந்துவிட்ட நிலையில் பஸ் பின்னர் கோண்டாவில் டிப்போவுக்குக் கொண்டுசெல்லப்பட்டது பஸ்ஸின் இலக்கம் 23 ஸ்ரீ 8596

பஸ் எரிந்ததால் ஏழு லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### பிந்திய செய்தி

மேற்குறிப்பிட்ட பஸ் எரிக்கப்பட்டது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களை பொலிசாருக்குத் தெரியுமென்றும், இவர்கள் எந்தநேரத்திலும் கைதுசெய்யப்படலாம் என்றும் இதற்காகத் தனியாக ஒரு பொலிஸ் பிரிவு இயங்குவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் நேற்றிரவு 'ஈழநாடு'க்கு தெரிவித்தது.

## தமிழீழ....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றேன்.

சத்: நீங்களே வெட்கப்படக்கூடிய விதத்தில் நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள்.

சா: இல்லை.

சத்: 6-வது எதிரியின் வலது காலில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை அளிக்க இடம் அளிக்கவில்லை.

சா: நான் அதை மறுக்கிறேன் அவருக்கு கிகிச்சை அளிக்கப்பட்டது.

சத்: ஆகஸ்டில் உமது முன்னிலையில் 6-ம் எதிரியின் காலிலிருந்த புண்ணிலிருந்து 9யார் பண்டேஜ் துணி கழற்றி எடுக்கப்பட்டது.

சா: இல்லை.

சத்: நீர் கடவுளுக்குப் பயந்தவரா?

சா: ஆம். கடவுள் பயம் உண்டு.

சத்: ஆனையிறவு முகாமில் வைத்து எதிரியின் கால் புண்ணிலிருந்து 9 யார் பண்டேஜ் துணி எடுக்கப்பட்டபோது அந்தப் புண்ணிலிருந்து எழுந்த நாற்றம் பொறுக்க முடியாது அந்த இடத்தை விட்டுநீங்கள் ஓடினீர்கள்.

சா: அதை மறுக்கிறேன்.

சத்: நீங்களும் உங்களுடைய சக அதிகாரிகளும் ஆனையிறவு முகாமில் மேற்கொண்ட சித்திரவதைகளினால் ஏற்பட்ட மாற்றமே பல வருடங்களாக நிலைத்து நிற்கும்.

சாட்: சித்திரவதை இடம் பெறவில்லை.

யாழ். நகரில் முதன் முறையாக
SPECIAL ENGLISH COURSE
இரு முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை
திரு. T. N. பஞ்சாட்சரம்
திரு. R. S. நாயகம்
6 மாதத் தீவிரப் பயிற்சி
ஆரம்பம்: 7-2-83
பாடத்தொகுதி: ஆங்கில உரையாடல் பயிற்சி, இலக்கணமும் பாவனையும், சொல்வியல் விருத்தி, வாசிக்க எழுதப் பயிற்சி
இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
விபரங்களுக்கு:- நேரில்/தபாலில்
அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
166/1, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்

* வெளிநாட்டுப் பயணமா?
யாழ்ப்பாணத்திலேயே
குறைந்த கட்டணத்தில்
எந்த நாட்டிற்கும்
விரும்பிய விமானத்தில்
செல்ல
★விமான டிக்கட்டுகள்
★பிரயாண காசோலைகள்
(AMERICAN EXPRESS TRAVELLER CHEQUES)
வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
மக்கினென் டிறவல்ஸ் லிமிட்.
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
த. பெ. எண் 92, தொலைபேசி: 24154



## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

1983 - 1 - 15.

திரு. வேலுப்பிள்ளை நடேசன்
(இளைப்பாறிய இசையாசிரியர் டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி)

தோற்றம்: 1920 - 12 - 20
மறைவு: 1982 - 1 - 15

அன்பின் ஒளி விளக்காய் பண்பின் திலகமாய் எமது குலவிளக்காய் திகழ்ந்த எம்தெய்வமே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது. ஆண்டுத் திவசம் இன்று நடைபெறுகின்றது. பிரிவு நினைவு எம் இதயத்தை எக்கணமும் வருத்துகின்ற தெனினும் தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள் சகோதரிகள், மருமக்கள்.
'நுணாவில் கிழக்கு' சாவகச்சேரி.
6094

## மரண அறிவித்தல்

சிவஸ்ரீ க. சோமசுந்தரக்குருக்கள்

பொலிகண்டி கந்தவனம் பிரதம குருக்கள் சிவஸ்ரீ கனகசபாபதிக் குருக்கள் சோமசுந்தரக்குருக்கள் காலமானார். ஈமக்கிரியைகள் இன்று 4-02-83 காலை பத்து மணியளவில் பொலிகண்டியில் நடைபெறும்.

தகவல்: ந. மூர்த்திஐயர். (6093)

## அறிவித்தல்

செல்வி இவஞ்ஜலீன் கிருபை மதியாபரணம்
MISS EVANGELINE KIRUBAI MATHIAPARANAM

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி இவஞ்ஜலீன் கிருபை மதியாபரணம் காலமானார்.

இவர் செல்விகள் கண்மலர், அரியநேசம், திருமதி றேஸ் பார்மர், காலஞ்சென்ற திருமதி இராணி குட்டித்தம்பி ஆகியோரின் சகோதரியும், எலிசபெத் லூர்து அம்மாளின் நண்பியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று (3-2-83) வியாழன் பிற்பகல் 4 மணிக்கு மானிப்பாயில் நடைபெற்றது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Eelanadu - P. O. Box 49, Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126]